**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் கார்த்திகை திங்கள் 5–ம் நாள்

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024

இன்

அசல் வழக்கு எண்.6/201921

(CNR.No.TNTR21-000019-2021)

...

சதாசிவம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

கண்ணியப்பன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 05.11..2024 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. பார்த்தசாரதி, N.G.நாகபூசனம், B. ஜமுனா ஆகியார்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி S. கார்த்திகேயன், E. தணிகைராஜ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இரு தரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

வழக்கு சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அதன் இயற்கை அமைப்பு, அனுபவம் குறித்து வரைபடத்துடன் கூடிய விரிவானதொரு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுவின் சுருக்கம்:–</u>**

(அ) அசல் வழக்கு வா.சா1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் குடியிருந்து வருவதாக தவறுதலாக சொல்லியிட்டார். ஆனால் எதிர்மனுதாரர் குடியிருக்கவில்லை. மனுதாரர்தான் பலவருடங்களாக குடியிருந்து வருகிறார். அதை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் தவிர வேறு வழியில்லை. நில அளவையர் உதவி தேவையில்லை. எனவே நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, இயற்கை அமைவிடம் பொறுத்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. 5 நாட்களுக்கு முன்பு எதிர்மனுதார் வழக்கு சொத்தில் குடிசை வீடு அமைக்க முயற்சி செய்தார். பக்கத்து இடத்துக்காரர் உதவியுடன் மனுதாரர் தடுத்து நிறுத்திவிட்டார். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே இது தொடர்பாக வாய்த்தகராறு எற்பட்டது. இந்த விதமான தொந்தரவுகளை தவிர்க்க

இம்மனு அவசியமாக உள்ளது. மனுதாரரின் இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும். எனவே மனுதாரரால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>எதிர்மனுதாரரின் மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

(அ) இம்மனு சட்டப்படியும் சங்கதிகள்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் இருக்கிறது என்பது உண்மை. வழக்கு சொத்தை பொறுத்து எதிர்மனுதாரரின் வழக்குறிஞர் கேள்வி கேட்டபோது தவறுதலாக மனுதாரர் ஆமாம் என பதில் அளித்து விட்டதாகவும், ஆனால் வழக்கு சொத்தில் பல வருடங்களாக எதிர்மனுதாரர் குடியிருக்கவில்லை என்றும் இன்றுவரை மனுதாரர்தான் குடியுள்ளார் என்றும் அதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் தவிர வேறு வழியில்லை என்றும் நில அளவையர் உதவி தேவையில்லை என்றும் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, இயற்கை அமைவிடம் பொறுத்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறுவது பொய் ஆகும்.

(ஆ) மனுதாரர் படிக்காத கிராமத்தார் என்பதால் அவருக்கு நீதிமன்ற நடிவடிக்கை தெரியாது என்றும் மனுதாரரின் அனுபவத்தை நிரூபிக்க இதே ஒரு வழி என்பதும் பொய்யான, கற்பனையான சங்கதிகள் ஆகும். எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் குடிசை வீடு அமைக்க முயற்சித்ததை மனுதாரர் தடுத்து விட்டதாகவும் இது மாதிரியான தொந்தரவுகளை தவிர்க்க மனுதாரரின் அனுபவத்தை நிரூபிக்க இதுதான் ஒரே வழி என்று கூறியிருப்பது மறுக்கப்டுகிறது. மனுதாரரிடம் குறுக்கு விசாரணையின்போது கேட்கப்பட்ட நேரடியான கேள்விக்கு ஆமாம் என்று பதில் அளித்துள்ளார். தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார். எதிர்மனுதாரர் 40 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்.

(இ) நீதிமன்ற ஆணையர் மூலம் மேற்படி விவரங்களை மறைக்க வேண்டி இந்த பொய்யான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடியாட்கள் உதவியுடன் குடிசைவீடு அமைக்க முயற்சித்தாக கூறுவது பொய். இந்த எதிர்மனுதாரர் சட்டத்தை மதிக்கக்கூடியவர். மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. வழக்கு சொத்தின் இயற்கை அமைப்பு, அனுபவம் மற்றும் சாட்சியத்தை சேகரிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என பல்வேறு தீர்ப்புகள் உள்ளது. சி.ஆர்.பி(பிடி).எண்.2029/2016 ல் மேற்படி சங்கதி தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை. வழக்கு சொத்தை அபகரிக்கவே இந்த பொய்யான வழக்கை தாக்கல்செய்துள்ளார். மனுதாரருக்கு வழக்கு சொத்தில் அனுபவமோ, உரிமையோ இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. **<u>தீர்வு:–</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. தவறுதலாக சாட்சியத்தில் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக வா.சா.1 சாட்சியம் அளித்து விட்டார் என்றும், உண்மை நிலையை விவரிக்க நீதிமன்ற ஆணையர் அவசியம் என்றும் எனவே மனுவை அனுமதிக்க கோரி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. 40 ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கு சொத்தில் எதிர்மனுதாரர் குடியிருந்து வருகிறார் என்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ள வழக்கில், தாவா சொத்தின் அனுபவத்தை காட்டவோ, சாட்சியத்தை சேகரிக்கவோ, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என பல்வேறு தீர்ப்புகள் உள்ள நிலையில், வாதி உண்மையாக அளித்த சாட்சியத்தை மறைக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய கோரி எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

5. அசல் வழக்கானது 25.01.2019ம் தேதியிட்டு தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 02.02.2021ம் தேதியிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 08.11.2021ம் தேதியிட்டு வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்துக் கொண்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு 25.11.2021 முதல் நிலுவையில் இருந்து வந்து இறுதியாக 07.08.2024ம் தேதி வாதி பகுதி குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வழக்கு சொத்தில் யார் அனுபவத்தில் உள்ளார் என்பதை காட்ட வாதி இம்மனு தாக்கல் செய்துள்ளதாக வாதி தன் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார். நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், தாவா சொத்தின் அனுபவத்தை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என பல்வேறு மாண்பமை உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகளில் கூறியுள்ள நிலையில் மனுதாரரின் இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்ற நடவடிக்கைகளை காலங்கடத்த வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/–Gurulakshmi
22.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை

Sd/–Gurulakshmi
22.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.